பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 14 சனிக்கிழமை 30.07.2022 கதிர் 267


இனி இது ரகசியம் அல்ல!

ஊடகவியலாளனின் பணியையொட்டி ஒரு முக்கிய விடயத்தை வாசகர்களுடன் மேலோட்டமாகப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

நாம் வெளிப்படுத்தும் தகவல்கள், செய்திகளில் தவறு அல்லது பிழை இருந்தால் ☞2

# சர்வகட்சி அரசை அமைப்பதற்கு சகல எம்.பிக்களுக்கும் அழைப்பு

## ஜனாதிபதியால் நேற்றுக் கடிதம் அனுப்பிவைப்பு



சர்வகட்சி அரசை அமைப்பதற்கு ஒன்றிணையுமாறு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்றுக் காலை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எழுத்து மூலம் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ☞2

## தெற்குக் கைதுகளுக்கு எதிராக யாழ் நகரில் நேற்று கவனயீர்ப்பு



காலி முகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைக்கு எதிராகவும் அதனை தடுத்து நிறுத்த வேண்டுமென வலியுறுத்தியும் ☞2

## சமூக ஊடகச் செயற்பாட்டாளரான பதும் கேர்னருக்கு விளக்கமறியல்



சமூக ஊடகச் செயற்பாட்டாளர் பதும் கேர்னர் ஆகஸ்ட் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தால் இந்த உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வாக்குமூலம் ஒன்றை ☞2

## தொண்டைமானாறு கடலேரியில் இறந்து கரை ஒதுங்கும் மீன்கள்!



தொண்டைமானாறு கடல் நீர் ஏரியில் இறந்த நிலையில் நேற்று அதிகளவிலான மீன்கள் கரையோரங்கியுள்ளன. அப் பகுதியில் மீன் பிடிக்க சென்றவர்கள் இதனை அவதானித்துள்ளனர். ☞2

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதான

## தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் பிணையில் விடுவிப்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டிருந்த மட்டக்களப்பு தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

'பேஸ்புக்'கில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சார்பாக ☞2

## செயலக ஊழியரை விலகப் பணிப்புரை

யாழ்ப்பாணத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடமையாற்றும் பிரதேச செயலக, மாவட்ட செயலகப் பணியாளர்களை அந்தக் கடமையிலிருந்து விலகித் தமது வழமையான அலுவலகக் கடமைக்குச் செல்லுமாறு ☞2

## மனோ, ஹக்கீம், ரிஷாத் அணிகள் சர்வகட்சி அரசுக்குப் பச்சைக்கொடி



சர்வகட்சி அரசில் இணைவதற்குத் தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பச்சைக்கொடி காட்டியுள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

அடுத்த இரு வாரங்களுக்குள் சர்வகட்சி அரசு அமைப்பதற்கான நடவடிக்கையில் இறங்கியுள்ள ஜனாதிபதி, சர்வகட்சி அரசை ☞2

## அம்பாந்தோட்டைக்குச் சீனக் கப்பல்; இந்தியக் கரிசனைக்கு பீஜிங் பதிலடி

தனது நாட்டின் சட்டபூர்வமான கடல்சார் நடவடிக்கைகளில் சம்பந்தப்பட்ட தரப்பினர் தலையிடமாட்டார்கள் என சீனா நேற்றுத் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட தரப்பினர் என்று பீஜிங் குறிப்பிட்டது இந்தியாவைத்தான் எனக் கருதப்படுகின்றது.

அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு சீனக் கப்பல் வரத் திட்டமிடப்பட்டுள்ளதை அறிந்துள்ளதாகவும், அதனை அவதானித்து வருவதாகவும் இந்திய அதிகாரிகள் ☞4

## மக்களின் ஆணையைப் பெற்ற புது அரசே நாட்டுக்குத் தேவை

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



நாட்டு மக்களுக்கு வாழ்வுக்கூட பிரச்சினையாகியுள்ள இத்தருணத்தில் தற்போதைய அரசு அரசியல் சூதாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த அரசியல் சூதாட்டத்தின் ஊடாக எண்ணெய், எரிவாயு, பால்மா, உரம் போன்ற அனைவரது ☞4

## காலிமுகத்திடல் அருகே கடற்கரையில் சடலம்!

கொழும்பு - காலிமுகத்திடல் கடற்கரையிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்ட இந்தச் சடலம், இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்றிரவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கைவிரித்தது உலக வங்கி!

### பொருளாதாரக் கொள்கை மாற்றம் இன்னும் இல்லை என்று அதிருப்தி




போதுமான பொருளாதார கொள்கைக் கட்டமைப்பை உருவாக்கும் வரை இலங்கைக்கு புதிய நிதியுதவியை வழங்க தயாரில்லை என உலக வங்கி அறிவித்துள்ளது. ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அவற்றை உடனடியாக விரைந்து ஒப்புக் கொள்வதில் என்றும் பின்னிற்பவன் அல்லன் நான். அது நமது பத்திரிகை தர்மமும் கூட. நான்கு தசாப்தத்துக்கும் மேற்பட்ட என்னுடைய ஊடகப் பணியை நோக்கிய பலருக்கும் அது புரியும்.

கடந்த வாரம் ஜனாதிபதி தெரிவுக்கு முதல் நாள் இரவு இடம் பெற்றவை தொடர்பாக நாம் அம்பலப்படுத்திய விடயம் பலதரப்பிலும் மறுக்கப்பட்டது. அந்த மறுப்புகளை அப்படியே பிரசுரித்த மையுடன் நாம் அமைதி பேணியமையால் இப்போது குற்ற விரல் சில தரப்புகளினால் எம் பக்கம் நீட்டப்படுகின்றது.

அம்பலப்படுத்திய விடயத்தில் உண்மையை நிரூபிப்பதற்கு பல வழிகள், வசதிகள், ஆதாரங்கள் தாராளமாக உண்டு. ஆனால் இவை எல்லாவற்றிற்கும் அப்பால் ஓர் ஊடகவியலாளனுக்கு ஒரு சமூக கடமையும் பொறுப்பும் கூட உள்ளன.

இன்று நாம் மட்டுமல்ல, நமது நாடே பிச்சை எடுக்கும் நிலைமை. எங்கள் யாசகத் தட்டில் ஏதேனும் சொற்பம் கிட்டுகின்றது என்றால் அது எங்கிருந்து என்பது எல்லோருக்கும் தெரியும்.

எங்கள் சர்ச்சைக்காகப் பரந்த பொது வெளியில் நாம் அம்பலப்படுத்தக்கூடிய எந்த உண்மையும் ஒரு நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தேர்தலில் சில தரப்புக்களின் நேரடித் தலையீடு என்ற சர்வதேச சிக்கல்களையும், அதன் தொடர் விளைவுகளையும், யாசகத் தட்டே புறம் ஒதுக்கப்படும் நிலைமையும் கூட எட்டும் வாய்ப்புகள் உண்டு என்ற விபரீதங்கள் நமக்கு புரிய வைக்கப்பட்டன.

அம்பாந்தோட்டைக்குச் சீன கப்பல் வருவதை ஒட்டி தற்போது எழுந்துள்ள ராஜதந்திரப் பதற்றம் நம் அனைவருக்கும் இப்போது தெரியும். (விடயம் தனியான செய்தியாக உள்ளது.) அந்தத் துறைமுகத்தை சீனாவுக்கு தாரை வார்த்தவர் யார் என்பதும் நமக்கு புரியும். இந்தப் பின்புலத்தில் ஜனாதிபதி தெரிவுக்கு முதல் நாள் நடந்த விடயங்களின் தாரதம்மியத்தை வாசகர்களே எடைபோட்டுக் கொள்வார்கள் என நம்புகிறேன்.

நாம் சிக்கியுள்ள சர்ச்சை ஒரு கட்சியினரின் அப்பட்டமான பொய் மறுப்பை அம்பலப்படுத்தும் ஒரு அற்ப விடயம் அல்ல. அதையும் தாண்டி பட்டினிச்சாவிலிருந்து நாடு மீளும் எத்தனைத்துக்கு கால் இடரும் விளைவையும் தரக்கூடிய சிக்கலான பிரச்சினை.

யுத்தத்தின் இறுதி கட்டத்தில் இடம்பெற்றவை தொடர்பில் தென்னிலங்கை ஊடகங்கள் பலவற்றுக்கும் விலாவாரியாக பல உண்மைகள் தெரியும். ஆனால் அவை பல விடயங்கள் மறுத்துரைக்கப்படுவது தவறு என்று தெரிந்தும் தாம் சார்ந்த சமூகத்துக்காக மௌனம் பேணுகின்றன. அதேபோன்ற இக்கட்டுதான் இவ்விடயத்தில் நமக்கும். உண்மையை நிரூபிப்பது ஜுஜுப்பி வேலை. ஆனால் விளைவு அத்தகைய அற்பம் அல்ல. உண்மை பகிரங்க வெளியில் நிரூபிக்கப்பட்ட பின்னரும் சம்பந்தப்பட்ட தரப்புகள் ராஜதந்திர உறவுகளில் கூட கைகோர்க்க முடியாது என்பதுதான் யதார்த் தம்.

எமது இந்த இக்கட்டு, செய்தவற்றையெல்லாம் புரிந்துவிட்டு மறுக்கின்ற கீழ்த்தர அரசியல்வாதிகளுக்கு சாதகமாகி விட்டது. அவ்வளவுதான்.

நான் பூடகமாக எழுதினாலும், என் வாசகர்களுக்கு விடயம் ஆழமாக புரியும் என்று நம்புகிறேன்.

– மின்னல் –

## மனோ, ஹக்கீம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அமைப்பதற்கு ஒன்றிணையுமாறு நேற்று அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதம் மூலம் அழைப்பும் விடுத்துள்ளார்.

இது சம்பந்தமாக கட்சிகளுடன் ஜனாதிபதி நேரில் கலந்துரையாடி வருகின்றார். இதற்கமைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நேற்றுமுன்தினம் அவர் பேச்சு நடத்தினார். அக்கட்சியும் சாதக சமிக்ஞையை வெளிப்படுத்தியுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியிலிருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படும் சம்பிக்க ரணவக்க எம்.பியும் சாதகமான நிலைப்பாட்டிலேயே உள்ளார்.

இந்நிலையிலேயே மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியும், ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் மற்றும் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் ரணிலுக்கு நேசக்கரம் நீட்டவுள்ளன.

## தெற்குக் கைது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
யாழ்ப்பாணத்தில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்பு குழு'வின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட செயலகம் முன்பாக இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது 'கைது செய்யாதே! கைது செய்யாதே! போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்யாதே!', 'நிறுத்து, நிறுத்து, அடக்குமுறைகளை நிறுத்து!', 'வேண்டும், வேண்டும், ஜனநாயக உரிமை' போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை தாங்கியவாறு பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## சமூக ஊடகச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
வழங்குவதற்காக நேற்றுமுன்தினம் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்குச் சென்ற அவர் வாக்குமூலத்தை வழங்கியிருந்த நிலையில், அதன் பின்னர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கடந்த 13ஆம் திகதி பத்தரமுல்லை – பொல்துவ சந்தியில் பொலிஸாரால் இடப்பட்டிருந்த வீதித் தடைகளை உடைத்து அந்த இடத்தில் இருந்த மக்களுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தியமை தொடர்பில் அவருக்கு எதிராகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

## தமிழ் உணர்வாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கருத்துரைத்தமை தொடர்பில் கடந்த வருடம் மார்ச் மாதம் 5ஆம் திகதி அவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இந்தநிலையில், ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றத்தால் அவருக்கு நேற்றுப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையிலும், 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையிலும் அவர் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## தொண்டைமானாறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதற்கான காரணம் தெரியவராத நிலையில் கடல் நீர் ஏரியின் நீர் மட்டம் குறைந்து, உப்பின் செறிவு அதிகரித்ததன் விளைவாக இவ்வாறு மீன்கள் இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

## செயலக ஊழியரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பணிக்கப்பட்டுள்ளது.

அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் யாழ். மாவட்ட செயலர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். அரச உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்பாட்டில் இளைஞர் சேவைகள் மன்ற உறுப்பினர்கள் கடமையில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## கைவிரித்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அறிக்கையொன்றில் இதனைத் தெரிவித்துள்ள உலக வங்கி இலங்கையின் மோசமான பொருளாதார நெருக்கடி மற்றும் மக்கள் மீதான அதன் தாக்கம் குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

மருந்துகள், சமையல் எரிவாயு, உரம், பாடசாலை மாணவர்களிற்கான உணவுகள் போன்றவற்றில் காணப்படும் பற்றாக்குறை மற்றும் வறிய மற்றும் நலிந்த நிலையில் உள்ள குடும்பங்களிற்கான நிதியுதவி போன்றவற்றிற்காக தனது நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காணப்படும் கடன்களின் கீழ் வளங்களை மறுபரிசீலனை செய்வதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

இன்றுவரை இந்த நிதியில் 160 மில்லியன் அமெரிக்க டொலரை அவசர தேவைகளை பூர்த்தி செய்வதற்காக வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ள உலக வங்கி, ஏனைய அடிப்படை சேவைகள், மருந்து, மருத்துவ விநியோகம், பாடசாலை உணவுகள் போன்றவற்றிற்காகவும் இந்த நிதியை வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்த வழமைகள் ஏழ்மையான நலிந்த நிலையில் உள்ள மக்களை சென்றடைவதை உறுதி செய்வதற்காக நம்பிக்கைக்குரிய கட்டுப்பாடுகள் மற்றும் மேற்பார்வைகளை நடைமுறைப்படுத்தும் அமைப்புகளுடன் இணைந்து நெருக்கமாக பணியாற்றுகின்றோம் எனவும் தெரிவித்துள்ள உலக வங்கி நாங்கள் இதனை தொடர்ந்து கண்காணிப்போம் என தெரிவித்துள்ளது.

## சர்வகட்சி அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதேவேளை, 9ஆவது நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரை நிகழ்த்தவுள்ளார் எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 3ஆம் திகதி ஜனாதிபதி குறித்த உரையை நிகழ்த்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.


**Vacancy – Post of Tutor-Mentors [On Contract]**
**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**CENTRE FOR OPEN AND DISTANCE LEARNING**
**BACHELOR OF ARTS DEGREE PROGRAMME**
**WALK – IN – INTERVIEW**

Walk – in – Interview will be held for the following post on contract basis for one year for the Centre for Open and Distance learning, University of Jaffna.

**Post of Tutor-Mentor [On Contract - 02 Posts]- Bachelor of Arts Degree Progrmme**

**Place & Time:**
- **Date:** 15.08.2022
- **Time:** 09.00 A.M
- **Venue:** Board Room, Centre for Open and Distance Learning, University of Jaffna, Thirunelvely.

**Requirements:**
- A degree with Class from a recognized University in Bachelor of Arts
- Should have good command in English & Tamil
- Should have Computer Application skills in MS Office, Learning Management System (Moodle), Internet & e-mail & typing skill in English & Tamil.

**Salary:** Rs.56, 800/= [fixed] per month

Interested candidates with required qualification are expected to be present for the interview at the scheduled time with relevant certificates, NIC and the self prepared application.

Registrar
University of Jaffna
29.07.2022




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பீரிஸுக்கு வந்த ஞானம்

அதிகாரம், அமைச்சுப் பதவி போன்றவை பறிபோனால் தான் சிலருக்கு ஞானம் பிறக்கும் போல.

அப்படி இப்போது ஒருவருக்கு இயற்கை ஞானம் பிறந்திருக்கின்றது. அவர் வேறு யாருமல்லர், பேராசிரிய ஜீ.எல்.பீரிஸ்தான்.

இலங்கையில் 'ஆயாராம், காயராம்' அரசியல் நடத்திய பேர்வழிகள் என்று பட்டியலிட்டால் அதில் முதலிடம் அவருக்குத்தான்.

ஜனாதிபதிகள் சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்ற எல்லோரினதும் அரசிலும் அவர் அமைச்சராக இருந்தவர். ஒவ்வொரு தடவையும் அணி மாறும் போதும் அதற்கேற்ப 'பிளேட்டை' மாற்றிப் போடுவார். தேர்தலைச் சந்தித்து வெற்றி பெறமுடியாமல் போக, அவர் தேசியப் பட்டியல் மூலம் எம்.பி. பதவி நியமனத்தையும், அதன் வாயிலாக அமைச்சுப் பதவியையும் ஈட்ட எந்த வித நிலைப்பாட்டையும் எடுப்பார். எந்தக் கொள்கையையும் சட்டரீதியாக நியாயப்படுத்தும் வாதங்களை எடுத்துரைப்பார்.

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் தமிழருக்கு அதிக பட்ச அதிகாரப் பரவலாக்கலை பிரேரித்த ஜனாதிபதி சந்திரிகா அரசின் 2000ஆம் ஆண்டுக்கான புதிய அரசமைப்பு நகல் திட்டத்தை நேற்று 23ஆவது நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்ட நீலன் திருச்செல்வத்துடன் சேர்ந்து தயாரித்தவர் அவர்தான்.

2002 இறுதியில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அமைந்த சமஷ்டிக் கட்டமைப்பு மூலம் தீர்வு காணும் ஒஸ்லோ இணக்கப்பாட்டை புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கத்துடன் சேர்ந்து இலங்கை அரசுப் பிரதிநிதியாக அறிவித்தவர் அவர்தான்.

முதலில் சந்திரிகாவுடனும், பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் ஒட்டிக் கொண்டு நின்று அரசியல் செய்த பேராசிரியர் பீரிஸ், அதன் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவுடனும், கோட்டாபய ராஜபக்ஷவுடனும் ஒட்டி நின்று அரசியல் செய்வதற்காக அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாகத் தாம் முன்னர் மேற்கொண்ட தாராளப் போக்கு முடிவுகளை எல்லாம் தலைகீழாக்கும் குத்துக்கரணப் போக்கை வெளிப்படுத்தியவர்.

இப்போது ரணிலின் அரசில் இடம் வழங்கப்படாதமையால் வெறுத்துப்போன பீரிஸ், ரணில் அரசு பிரகடனப்படுத்திய அவசரலாகச் சட்டம் குறித்து 'யூ டேர்ன்' அடித்து, விதண்டாவாதம் பேச முற்படுகின்றார்.

"அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துவது பொதுஜன பெரமுனவின் அடிப்படைக் கொள்கைகளுக்கு எதிரானது. பொதுமக்களின் உயிர்கள் மற்றும் உடைமைகளைப் பாதுகாப்பது தொடர்பாகப் போதிய ஏற்பாடுகள் சட்டத்தில் உள்ளமையால், அவசரகாலச் சட்டம் தேவையற்றது, அச்சட்டம் மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை நிறைவேற்ற வழிவகுக்கும். ஜெனிவாவில் 51ஆவது கூட்டத் தொடர் நடக்க இருக்கையில் இந்தச் சட்டம் அதில் பாதிப்பான விளைவுகளை ஏற்படுத்தும். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை இல்லாமல் போகும் அபாயமும் இதனால் நேரும்." – என்றெல்லாம் தத்துவம் பிளந்திருக்கின்றார் கற்றறிந்த புத்திஜீவியான பேராசிரியர் பீரிஸ்.

அவர் கூறியவை உண்மை. சரியானவைதான். ஆனால் இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலத்துக்குள் அப்போது ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ இதே போன்று இரண்டு தடவைகள் அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்திய போது இந்த ஞானம் பேராசிரியர் பீரிஸுக்குப் பிறக்காதமை ஏன்? அவர் அப்போது தாங்கியிருந்த வெளிவிவகார அமைச்சர் பதவி என்ற பவிசு அந்த ஞானத்தை அப்போது மறைத்து விட்டதோ?

# கூட்டமைப்பை பிளவுபடுத்த சிலர் முயற்சி செய்கின்றனர்!

## கோவிந்தன் கருணாகரம் குற்றச்சாட்டு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள மூன்று கட்சிகளையும் உடைத்து சிதறடிக்கும் வேலைத்திட்டங்களை சிலர் முன்னெடுத்துவருகின்றனர் எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

மஹிந்த ராஜபக்ஷவின் அனுசரணையுடன் இன்று இயங்கிவரும் இந்த அரசாங்கத்துக்கு மக்கள் மத்தியில் எந்தவொரு செல்வாக்கும் கிடையாது.

மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டில் பத்து வருடத்துக்கு மேலாக ஜனாதிபதியாகவிருந்து இன்று அரசியல் அநாதையாக்கப்பட்டுள்ளார்.

மே மாதம் முள்ளிவாய்க்காலில் ஒரு லட்சத்து 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்களையும் ஆயிரக்கணக்கான போராளிகளையும் கொன்றுகுவித்த கோட்டாபய ராஜபக்ஷ, இன்று வெளிநாடுகளில் கூட தங்க முடியாத நிலைமையில் உள்ளார்.

ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்துடன் நாடாளுமன்றுக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க இன்று ஜனாதிபதியாகியுள்ளார். சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்காக அறைகூவலையும் அவர் விடுத்துள்ளார்.

2015 – 2019 வரையில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியிருந்தது.

இன்று ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களித்திருந்தது.

தமிழத் தேசியக் கூட்டமைப்பின் பல உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்தனர் எனக் கதைகள் கூறப்படுகின்றன.

எனினும், ஜனாதிபதி தெரிவு தொடர்பாக ஒன்றுபட்ட நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்துபேரும் செயற்பட்டனர்.

இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி, சிங்கள மக்களுக்கு மட்டுமல்லாது தமிழ் மக்களுக்கும் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ் மக்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன. தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வுத்திட்டம் வேண்டும். அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையொன்று ஏற்பட வேண்டும்என்பது அனைவரது அபிலாஷையாகும்.

சர்வகட்சி ஆட்சியமைப்பதற்கான அழைப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் பங்கெடுக்கும் என்று நான் கருத வில்லை.

சர்வகட்சி ஆட்சியொன்று அமைய வேண்டும், எமது இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்று அந்த சர்வகட்சி ஊடாக ஏற்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

இனப்பிரச்சினைக்கான தீர்வொன்று தொடர்பாகத் தெற்கு அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். – என்றார்.

---

### மக்களின் ஆணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரச்சினைகளுக்கும் தீர்வு இல்லை.

தீர்வுகள் இல்லாத நாட்டுக்கு அரசியல் சூதாட்டம் பதிலாக இருக்கக் கூடாது. இந்த அரசியல் சூதாட்டம் சீரற்ற அரசியல் கலாசாரத்தின் பண்பாகும்.

இந்நிலையிலிருந்து விடுபட புதிய அரசே நாட்டுக்கு தேவை. ஒப்பந்தங்களின் மூலம் அன்றி மக்கள் அபிப்பிராயத்தின் ஊடான புதிய மக்கள் ஆணையை அந்த அரசு பெற வேண்டும்.

220 இலட்சம் மக்கள் தமது வாழ்க்கையை இழந்துள்ள இவ்வேளையில், அரசியல் தலைகள் மாறுதல், இசை நாற்காலி போட்டிகள், அமைச்சர்கள் மாற்றம் எனப் பேரம் பேசும் கலாசாரம் நிலவி வருகின்றது.

இத்தகைய சூழ்நிலையில் இந்த நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தற்போதைய அரசால் முடியவில்லை.

அரசு தனது இருப்பைக் காக்கவே முன்னுரிமை அளிக்கின்றது. நாட்டு மக்களின் வாழ்க்கையை ஸ்திரப்படுத்தல் தொடர்பில் இந்த அரசுக்கு எந்த எண்ணமும் இல்லை.

உலக வங்கி, பிட்ச் மதிப்பீட்டு நிறுவனம், சமந்தா பவர் போன்ற பல்வேறு இராஜதந்திரிகள், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நாட்டின் ஸ்திரத்தன்மை வலுவாக இருக்க வேண்டும் என்றும், பல்வகை பொருளாதாரக் கட்டமைப்பு நடைமுறையில் இருக்க வேண்டும் என்றே குறிப்பிடுகின்றனர். எனினும், இந்தக் கட்டமைப்பை உருவாக்குவதை விடுத்து அரசின் பிரதிநிதிகள் கடந்த மாதங்களில் முன்னெடுத்த நடவடிக்கைகளில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்ப புதிய மக்கள் ஆணையின் மூலமே முடியும். இதன்படி மரியாதைக்குரிய மகாநாயக்க தேரர்கள் மற்றும் ஏனைய சமயத் தலைவர்கள் கோரும் புதிய மக்கள் ஆணையைப் பெற வேண்டும்.

இந்த அரசியல் சூதாட்டம் நிறுத்தப்பட வேண்டும். பதவிகளை பரிமாற்றம் செய்வதால் 220 இலட்சம் மக்களின் துயரங்களுக்கும் கண்ணீருக்கும் தீர்வு கிடைக்காது – என்றார்.

---

### அம்பாந்தோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் சீனா இதனைத் தெரிவித்துள்ளது.

யுவான் வாங் 5 என்ற ஆராய்ச்சி மற்றும் ஆய்வுக் கப்பல் தற்போது அம்பாந்தோட்டை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக ரோய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இந்த கப்பல் ஒகஸ்ட் 11 ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறுகையில், பாதுகாப்பு மற்றும் பொருளாதார விடயங்களில் இந்தியா அக்கறை கொண்டுள்ளது. என்ன நடக்கிறது என்பதை அரசு கண்காணித்து வருகிறது. பாதுகாப்பு மற்றும் பொருளாதார விடயங்களில் ஏதேனும் பாதிப்பு இருந்தால், அவற்றைப் பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை இந்தியா எடுக்கும். – என குறிப்பிட்டிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் விதமாகவே சீனா இந்தப் பதிலடியை வழங்கியிருக்கின்றது.

# இலங்கைக்கு தொடர்ந்தும் நீளும் இந்திய ஆதரவுக் கரம்



பொருளாதார நெருக்கடியால் தத்தளித்துக் கொண்டிருக்கும் இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் தனது ஆதரவுக் கரத்தை நீட்டவுள்ளதாக அறிவித்துள்ளது.

முன்னதாக, இந்த ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே அந்நியச்செலாவணிக் கையிருப்பு இன்மை, சுற்றுலாப் பயணத் துறை வீழ்ச்சி, உள்நாட்டு உற்பத்தியின் மந்த நிலை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளால் இலங்கை பெற்ற கடன்களைக் கூட மீளத்திருப்பிச் செலுத்த முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டிருந்தது.

குறிப்பாக, ஏப்ரல், மே மாதங்களில் கடன் பெற்றவர்களுக்கு வட்டியையோ, கடன் தவணைப் பணத்தையோ செலுத்த முடியாது என்ற நிலைமையை இலங்கை அடைந்திருந்ததோடு தனது இயலாமையை உத்தியோகப்பூர்வமாகவும் அறிவித்திருந்தது.

இந்நிலையில், இந்தியா, அயல்நாட்டிற்கு முன்னுரிமை என்ற தனது கொள்கையின் அடிப்படையில் உலர் உணவுகள், எரிபொருள், மருந்துப்பொருள்கள் என்று அதிதியாவசியமான தேவைகளை பூர்த்தி செய்வதற்கான பல்வேறு உதவிகளை வழங்கியது.

இந்தியா, இந்த ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து தற்போது வரையில் கடன் எல்லை அடிப்படையில் 3.5 பில்லியன் அமெரிக்க டெலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. அதேவேளை, கணிசமான நிவாரணப் பொருள்களையும் இந்தியா கையளித்து வருகின்றது.

இறுதியாக, 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால்மா மற்றும் 100 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான மருந்துப் பொருள்கள் அடங்கிய 22 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான உதவிப் பொருள்கள் தமிழ் நாட்டினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ள நிலையில் அவற்றின் பிறிதொரு தொகுதியும் இந்தவாரம் கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், கேரளாவின் திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு வெளியே ஊடகவியலாளர்களைச் சந்தித்திருந்த இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் கலாநிதி.எஸ்.ஜெய்சங்கர், “நாங்கள் இலங்கைக்கு மிகவும் ஆதரவாக இருக்கிறோம். அந்நாட்டுக்கு நாங்கள் உதவ முயற்சிக்கிறோம், அவர்கள் சம்பந்தப்பட்ட இடங்களில் நாங்கள் எப்போதும் மிகவும் உதவியாக இருக்கிறோம்” என்று கூறினார். அத்துடன், “இலங்கையில் உள்ள அரசியல் தரப்பினர் சொந்த பிரச்சினைகளை தீர்க்க முற்பட்டுள்ளார்கள். எனவே அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். தற்போதைக்கு இலங்கை அகதிகள் நெருக்கடி எதுவும் இந்தியாவுக்கு இல்லை,’ என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான நிலையில், இலங்கையின் அரசமைப்புக்கு அமைவாக, நாடாளுமன்றத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்துச்செய்தியில், மிக முக்கியமாக, ‘நிறுவனமயப்படுத்தப்பட்ட ஜனநாயக வழிமுறைகள், நிறுவனங்கள் மற்றும் அரசமைப்பு ரீதியான கட்டமைப்பு ஆகியவற்றின் ஊடாக ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார மீட்சியை அடைய விரும்பும் இலங்கை மக்களின் முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ந்தும் ஆதரவளிக்கும்’ என பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், ‘இந்தியா, இலங்கை இடையிலான நெருக்கமானதும், தொன்மைவாய்ந்ததும், நட்புரீதியிலானதுமான உறவை வலுவாக்கவும் மக்களின் பரஸ்பர நலனுக்காகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்ப்பதாகவும்’ அவர் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பிரதமர் நரேந்திரமோடி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோரின் கூற்றுக்களின் பிரகாரம், இலங்கையின் நெருக்கடிகளுக்கு தொடர்ச்சியான உதவியளிப்புக்கள் செய்யப்படவுள்ளன என்பது வெளிப்பட்டுள்ளது. அதற்கான பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில், கொழும்பில் உள்ள உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி ஆகியோரை நேரில் சந்தித்துள்ளார். சம்பிரதாயபூர்வமான சந்திப்புக்களாக அவை இருந்தாலும், இந்தச் சந்திப்புக்களின்போது, இந்தியாவின், ஒத்துழைப்புக்கள் தொடரவுள்ளமைக்கான சமிக்ஞைகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அதேநேரம் இலங்கை தரப்பிலும், இதுகால வரையிலான உதவிகள் மீள் நினைவுபடுத்தப்பட்டு நன்றி கூறப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

உயர்ஸ்தானிகர், கோபால் பக்லே, எதிர்க்கட்சிகளில் ஒன்றான மக்கள் விடுதலை முன்னணியையும் சந்தித்துள்ளார். இவ்வாறான ஆளும், எதிர்த் தரப்பின் சந்திப்புக்கள், உள்நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை விரைந்து ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதாகவே அமைந்துள்ளது.

இவ்வாறு இந்தியா அரசியல், பொருளாதார ரீதியாக தனது அயலுறவுக்கு முதன்மைத் தானம் என்ற கொள்கையின் அடிப்படையில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அதிலும் குறிப்பாக, இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் காணப்படும் வரலாற்று ரீதியான தொடர்புகளின் அடிப்படையில் இந்தியா தனது தார்மீக கடமையை செவ்வனே நிறைவேற்றி வருகின்றது எனலாம்.

அதேநேரம், அண்மையில், இந்திய லோக்சபாவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் எஸ். இராமலிங்கம் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடத்தில் கேள்வியொன்றைத் தொடுத்திருந்தார். அந்த வினாவில், இலங்கைக்கு, இதுவரையில் இந்தியா வழங்கிய உதவிகளின் பெறுமதியை பகிரங்கப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கமைவாக, பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இலங்கைக்கு கடந்த ஒரு தசாப்த காலத்துக்குள் 1, 850.64 மில்லியன் டொலர்களை கடன் வரிகளாக வழங்கியிருப்பதாக குறிப்பிட்டார். அத்துடன், குறித்த கடன்வரியானது ரயில்வே, உட்கட்டமைப்பு, பாதுகாப்பு, எரிசக்தி, பெற்றோலியம் மற்றும் உரம் போன்றவற்றுக்காக வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்கூறியிருக்கின்றார்.

ஆக, இந்தியாவின் உதவிக்கரம் தொடர்ந்தும் நீண்டுகொண்டிருக்கின்றது இலங்கை மக்களின் மீட்சிக்காகவே. இலங்கையும், இலங்கை மக்களும் அது பற்றிய சரியான புரிதல் கொள்வதே காலத்தின் தேவையாகவுள்ளது.

# பின்தங்கிய பழங்குடிப் பூர்வீகப் பெண்மணி இந்தியாவின் முதல் ஜனாதிபதி பெருமை!



ராய்ராங்பூரிலிருந்து ரைசினா மலைகளுக்கு ஒரு நம்பமுடியாத பயணத்தை குறிக்கும் வகையில், திரௌபதி முர்மு திங்களன்று இந்தியாவின் 15 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றார். முர்மு, அகவை 64, இன்னும் வயதில் குறைந்த இளைய ஜனாதிபதி, அத்தோடு இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் பிறந்தவர் முதல் ஜனாதிபதியாகிய பெருமைக்குரியவர்.அவரை இந்தியத் தலைமை நீதிபதி, என்.வி.ரமணா, நாடாளுமன்ற மத்திய மண்டபத்தில் நடந்த வைபவத்தில் புதிய ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

தனது பழங்குடியினரின் வேர்களை அங்கீகரிக்கும் பாரம்பரிய மூவர்ண சந்தாலி சேலையை அணிந்து கொண்டு பதவியேற்ற முர்மு தனது முதல் உரையில், இந்தியக் குடியரசின் மிக உயர்ந்த அரசமைப்புப் பதவியான இந்தியக் குடியரசுத் தலைவராகத் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டமை தனிநபர் வெற்றியல்ல, ஏழைப் பெண்ணைக் கனவு காணவும் உயரவும் அனுமதித்த இந்திய ஜனநாயகத்தின் வெற்றி என்றார்.

ராம்நாத் கோவிந்திற்குப் பிறகு குடியரசுத் தலைவர் முர்மு மட்டுமே முதல் பழங்குடியினத் தலைவர், அத்தோடு உயர்மட்ட அரசமைப்புப் பதவிக்கு உயர்ந்த இரண்டாவது பெண்ணும் ஆவார்.

“ஏழை பழங்குடியினரின் வீட்டில் பிறந்த பெண், அரசமைப்புச் சட்டத்தின் உச்சப் பதவி நிலையை எட்டுவது இந்திய ஜனநாயகத்தின் சக்தி.நான் ஜனாதிபதி பதவியை அடைந்தது எனது தனிப்பட்ட சாதனை அல்ல. இது இந்தியாவின் ஒவ்வொரு ஏழையின் சாதனை. இந்தியாவில் உள்ள ஏழைகளும் கனவுகளைக் கொண்டு அவற்றை நிறைவேற்ற முடியும் என்பதற்கு எனது தேர்தல் சான்றாகும், என்று முர்மு தனது தாய்மொழி இல்லாவிட்டாலும், மிக சரளமாக இந்தியில் ஆற்றிய உரையில் கூறினார்.

ராய்ராங்பூரில் ஒரு கவுன்சிலராக தனது பொது வாழ்க்கையைத் தொடங்கி ஜார்க்கண்ட் ஆளுநராகப் பதவியேற்ற முர்மு, அனைத்து இந்தியர்களையும், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்களின் நலன்கள் தமக்கு மிக உயர்ந்த பட்ச விடயமாக இருக்கும் என்று உறுதியளிக்க விரும்புகிறார் எனக் கூறினார். இந்திய அரசமைப்பைப் பாதுகாப்பதற்கான உறுதிமொழியை எடுத்துக் கொண்ட ஜனாதிபதி முர்மு, ஒருவர் மிகவும் கஷ்டப்பட்டாலும் கூட, அதிலும் விட பிரபஞ்சத்தின் நலன் முக்கியமானது என ஒடியா கவிஞர் பீமா போய் பகவான் ஜெகநாதரிடம் பிரார்த்தனை செய்தமையை மேற்கோள் காட்டினார்,

பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சரவை, நாடாளுமன்ற உறுப்பினர்கள், முதல்வர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் நிரம்பியிருந்த நாடாளுமன்ற மத்திய மண்டபத்தின் மேடையில் அமர்ந்து குடியரசுத் தலைவர் முர்மு, பழங்குடியின சமூகங்கள், பேண்தகு வளர்ச்சி, அரசாங்கத்தின் டிஜிற்றல் இந்தியா மற்றும் உள்ளூர் முயற்சிகளுக்கான குரல், அத்துடன் கொவிட் தொற்றுநோயைக் கையாளுதல் போன்ற விடயங்களை அவர் தமது உரையில் தொட்டுப் பேசினார்.

இந்தியாவின் மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்றான ஒடிசாவின் மயூர்பஞ்சில் சந்தால் குடும்பத்தில் பிறந்த ஜனாதிபதி முர்மு ஒரு கிராமத்தில் வளர்ந்தார், அங்கு ஒரு இளம் பெண் ஆரம்பக் கல்வியைப் பெறுவது இன்னும் கனவாகவே இருந்தது. இருப்பினும், அவர் முரண்பாடுகளை முறியடித்து, தனது கிராமத்தில் கல்லூரிக் கல்வியில் சேரும் முதல் நபராக ஆனார்.

**பல நூற்றாண்டுகளாகத் தாழ்த்தப்பட்டவர்கள் என்னில் தங்கள் பிரதிபலிப்பைக் காண்கிறார்கள்**

பல நூற்றாண்டுகளாகப் பின்தங்கியவர்களும், வளர்ச்சியின் பலன்கள் மறுக்கப்பட்டவர்களும், ஏழைகள், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோரின் பிரதிபலிப்பை என்னில் பார்ப்பது எனக்கு மிகுந்த திருப்தி அளிக்கிறது, என்று அவர் கூறினார்.

(09ஆம் பக்கம் பார்க்க)












# யாழ் ராணி ரயில் நேற்று முதல் புதுப்பொலிவுடன் முறிகண்டியில் இருந்து காங்கேசன்துறை வந்தது!

காங்கேசன்துறை முறிகண்டி வரையில் சேவையில் ஈடுபடும் யாழ். ராணி ரயில் நேற்று முதல் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய ரயில் பெட்டிகளுடன் தனது சேவைகளை ஆரம்பித்தது.

காங்கேசன்துறையிலிருந்து அதிகாலை 6 மணிக்கு தனது பயணத்தைத் தொடங்கி முறிகண்டி வருகை தந்த ரயில், மீண்டும் முறிகண்டியில் இருந்து காலை 8.30 மணிக்கு காங்கேசன்துறையை சென்றடையும் யாழ்.ராணி ரயில் ஆரம்பித்த காலம் தொடக்கம் இன்று வரை பழைய பெட்டிகளுடன் தனது சேவையை மேற்கொண்டுவந்தது. அந்த வகையில் யாழ்.ராணி ரயில் இந்தியாவின் உதவியுடன் புதிய பெட்டிகளுடன் தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது.

எரிபொருள் நெருக்கடி நேரத்தில் யாழ்.ராணிரயில்அரசஉத்தியோகத்தரின் வேண்டுகோளுக்கு பொதுமக்களுக்கும் பெரும் சேவையை ஆற்றிவருகின்றமையால் யாழ்.ராணி ரயிலுக்கு மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

# கிறிஸ்தவ கற்கை முதுமாணி யாழ். பல்கலையில் ஆரம்பம்!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப் படிப்புகள் பீடத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ கற்கையில் முதுமாணி முதலாம் அணி மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு கடந்த 27 ஆம் திகதி, புதன்கிழமை, மாலை 4 மணியளவில் பலாலி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள உயர் பட்டப் படிப்புகள் பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணம் மறை மாவட்ட பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி ஜஸ்ரின் பி. ஞானப்பிரகாசம், மன்னார் மறை மாவட்ட பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி எப். எல். இம்மானுவல் பெர்னாண்டோ, திருகோணமலை மறை மாவட்டப் பேராயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி நோயல் இம்மானுவல் மற்றும் தென்னிந்தியத் திருச்சபையின் இளைப்பாறிய பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்களான பேராசிரியர் என். சண்முகலிங்கன், வாழ் நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை மற்றும் கிறிஸ்தவ நாகரிகத்துறையின் முன்னாள் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, கிறிஸ்தவ நாகரிகத்துறையின் தலைவர் வணக்கத்துக்குரிய அருட் தந்தை கலாநிதி ஜே. சி. போல் றொகான், பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள், யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த மதகுருமார், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கிறிஸ்தவ கற்கையில் முதுமாணி கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

உயர் பட்டப் படிப்புகள் பீடத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ கற்கையில் முதுமாணி கற்கைநெறி இரண்டு அரையாண்டுகளைக் கொண்ட – ஒரு வருட முழு நேர சுயநிதிக் கற்கைநெறியாகும். இலங்கையின் கல்வி சார் தகுதிகள் கட்டமைப்பின் பிரகாரம் 9 ஆவது தரத்துக்கிணையான இந்தக் கற்நெறியின் கட்டமைப்பு, பாடத்திட்டம் என்பன கிறிஸ்தவ நாகரிகத்துறையால் தயாரிக்கப்பட்டதாகும். கற்கை நெறியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப் படிப்புகள் பீடம் நிர்வகித்து நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்து கற்கைபீட திசைமுகப்படுத்தல் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பம்









யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் முதலாவது அணி மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வின் அறிமுக வைபவம் கடந்த புதன்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெற்றது. பல்கலைக்கழக வளாகத்தினுள் அமைந்துள்ள ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளையடுத்து, கைலாசபதி கலையரங்கில் நிழ்வுகள் ஆரம்பமாகின.

க. பொ. த உயர்தர 2019 ஆம் ஆண்டு கலைப் பிரிவில் தோற்றி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் கலைப் பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் சுமார் 50 மாணவர்கள் இந்து கற்கைகள் பீடத்தில் 2020/ 2021 ஆம் கல்வியாண்டுக்காகப் பதிவுகளை மேற்கொண்டிருந்தனர். இவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வே கடந்த புதன்கிழமை காலை அறிமுக வைபவத்துடன் ஆரம்பமாகியது.

இந்து கற்கைகள் பீடாதிபதி கலாநிதி சுகந்தினி ஸ்ரீ முரளீதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த அறிமுக நிகழ்வில் தவத்திரு. வேலன் சுவாமிகள், யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறி சற்குணராஜா, பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினரும், சைவசமயப் பெரியாருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், முன்னாள் துணைவேந்தர்களான பேராசியர் என். சண்முகலிங்கன், வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மற்றும் முன்னாள் பீடாதிபதிகள் மற்றும் துறைத் தலைவர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், பதிவாளர் வி. காண்டீபன், நலச் சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி. ராஜ் உமேஷ், மாணவர் ஒழுக்காற்று – சட்ட நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் சி. விஜயகுமார், துறைத் தலைவர்கள், நிர்வாக அலுவலர்கள், பதில் நூலகர் மற்றும் விரிவுரையாளர்கள், புதுமுக மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# பாட்டும் நானே? பாவமும் நானே!

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**




**1. கேள்வி:-** ஜனாதிபதித் தேர்வு பற்றி நடந்த கூட்டத்தில் இந்தியத் தூதரக அதிகாரியின் பேச்சை தொலைபேசி ஒலிபெருக்கியில், தான் விட்டதாகக் கூறப்படும் கருத்தினை அண்மையில் அளித்த பேட்டி ஒன்றில், சுமந்திரன் வன்மையாக மறுத்திருக்கிறார். நீங்கள் கூடச் சென்ற முறை அக்கருத்தை உள்வாங்கிப் பதில் அளித்திருந்தீர்கள். இப்போது என்ன சொல்லப் போகிறீர்கள்?

**பதில்:-** சொல்ல என்ன இருக்கிறது? சுமந்திரனிடம் மன்னிப்புக் கோருவதைத் தவிர வேறு வழியில்லை. வழக்கமாக 'காலைக்கதிர்' தருகிற இரகசியச் செய்திகள் பெரும்பாலும் உண்மையாய் இருப்பது வழக்கம். மேற்செய்தி 'காலைக்கதிரில்' வந்து ஓரிரண்டு நாள்களாகியும் சுமந்திரன் அச்செய்திக்கு மறுப்பேதும் தெரிவிக்கவில்லை. அதனால் அச்செய்தி உண்மையாய் இருக்கலாம் என்று நம்பியே நான் அங்ஙனம் எழுதிவிட்டேன். தற்போது வேறொரு ஊடகத்தில் சுமந்திரன் அச்செய்தியை வலிமையாய் மறுத்திருக்கிறார். அவர் அம்மறுப்பைக் 'காலைக்கதிரி'லேயே வெளியிட்டிருந்தால், அச் செய்தியைப் படித்து அவரைப் பிழையாய் நினைந்தவர்கள், தம்மைத் திருத்திக் கொள்ள வாய்ப்பாய் இருந்திருக் கும்.

அதுபோலவே சுமந்திரன் அச் செய்தியை வேறொரு ஊடகத்தில் மறுத்திருந்தாலும், அச் செய்தியை வெளியிட்ட 'காலைக்கதிர்' ஒன்று, அச் செய்தி சரியானதுதான் எனச் சான்று காட்டி நிரூபித்திருக்கவேண்டும். அல்லது பிழையான செய்தியை வெளியிட்டதற்காக மன்னிப்புக் கோரி இருக்கவேண்டும். 'காலைக்கதிரும்' அவ்விரண்டினையும் இதுவரை செய்யவில்லை. இப் பிழை, பத்திரிகாதர்மம் அறிந்த மூத்த பத்திரிகையாளரான வித்தியாதரனுக்கும் தெரியாததல்ல. எனவே இதில் ஆழமான மர்மம் ஏதோ இருப்பதாகவே தோன்றுகின்றது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ விடாக்கண்டன் - கொடாக்கண்டன்... ஹி..ஹி..**

**2. கேள்வி:-** மக்கள் புரட்சியாளர்கள், மறுநாள் இரண்டு மணிக்குத் தாமாகவே போராட்டத்தை முடித்துக் கொள்ளப் போவதாக அறிவித்திருக்க, அநாவசியமாக நடுச்சாமத்தில் பொலிஸ், இராணுவப் படைகளை அனுப்பித் தாக்குதல் செய்து அவர்களை அங்கிருந்து வெளியேற்றிய ரணிலின் முடிவு பற்றி என்ன நினைக்கிறீர்கள்.?

**பதில் :-** ரணில் தனது அதிகாரத்தை ஊருக்கும் உலகுக்கும் காட்ட முனைகிறார் என்று நினைக்கிறேன். புரட்சியாளர்கள் தாங்களாக விலகிப்போனால், அவர்கள் வழிவிட்டுத்தான் தான் ஆட்சி செய்வதாக ஆகிவிடும். அப்படியில்லாமல், அவர்களின் புரட்சியை முறியடித்தும் தன்னால் ஆட்சி நடத்தமுடியும் எனக் காட்ட விரும்பியதனாலேயே ஜனாதிபதி அத் தாக்குதலை நடத்தியிருக்கிறார் என்றே பலரும் சொல்கிறார்கள்.

சற்றுக் கசப்பாக இருந்தாலும் இவ்விடத்தில் ஓர் உண்மையையும் சொல்லவேண்டியிருக்கிறது. சரியோ, பிழையோ, ஒரு நாட்டில் அரசின் அதிகாரம்தான் உயர்ந்திருக்க வேண்டும். ஒரு ஜனநாயக நாட்டில் இது பொதுவிதி. அரசின் அதிகாரத்தை விட உயர்ந்ததான வேறு அதிகாரங்கள் நாட்டில் எவரிடமும் இருந்தால் அது ஒரு நாட்டின் நிலைத்தல் தன்மைக்குக் கேடு செய்யும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

புரட்சியாளர்கள் தம்மால் முடிந்திருந்தால், நாட்டின் மொத்த ஆட்சியையும் கைப்பற்றிச் சரியான நிர்வாகத்தை வழங்க தாம் முன்வந்திருக்க வேண்டும். அதைவிடுத்து, நிர்வாகப் பொறுப்பை ஏற்காமல் விலகி நின்று கொண்டு, நிர்வாகத்திற்கு வருவோரை எல்லாம் மிரட்டி அடிபணிய வைக்கும் எண்ணமும் தவறானதேயாம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தப்பி ஓடியமையோடு புரட்சியாளர்கள் தம் போராட்டத்தை ஓய்வுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும் என்பது என் எண்ணம். அதை விடுத்து 'அந்த அலுவலகத்தைக் கைப்பற்றினோம், இந்த மாளிகையைக் கைப்பற்றினோம் என்பதெல்லாம் வீண் வேலைகளாய்த்தான் படுகிறது. மக்கள் புரட்சி என்கின்ற பெரிய சக்தியை அவர்கள் வீணடித்துவிட்டார்கள். அவ்வளவு பெரிய சக்தியால் ஜனாதிபதியை வெளியேற்றி விட்டு, மாளிகைகளையும் அலுவலகங்களையும் கைப்பற்றி மகிழ்ந்தது தம் பெருமை தாம் அறியாத் தன்மையேயாம்.

அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட 'ரணில்' தன் நிர்வாகத்திற்குத் தெளிவாய் ஒரு வரைபடம் அமைக்கிறார் போல் தெரிகிறது. காலிமுகத்திடலில் அவர் நடத்திய தாக்குதல் அந்த வரைபடத்தின் முதற்புள்ளிதான் என்று நினைக்கிறேன். அவர் போட்டிருக்கும் வரைபடம் முற்றுப்பெறுமா? முட்டுப்படுமா? என்பதைக் காலம் தான் சொல்லவேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ தோல்வி நிலையென நினைத்தால்...**

**3. கேள்வி:-** காலி முகத்திடலில் ரணில் நடத்திய தாக்குதலை வைத்து, 'நாங்கள் ரணிலுக்கு எதிராக எடுத்த முடிவு சரியானது என்று இப்போது தெரிகிறதா?' என, சுமந்திரனும், சாணக்கியனும் விட்டிருக்கிற அறிக்கைகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** அரசியலில் அளவுக்கதிகமான தன்மானத்தைக் குற்றம் என்கிறார் திருவள்ளுவர் (இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா உவகையும் ஏதம் இறைக்கு). நடந்தது பிழை என்று தெரிந்த பின்பும், அதனை வலியுறுத்தி ஒரு தலைவன் நிற்பதால் அப்பிழை பெரிதாகி, அவன் இனத்தையே அது அழித்துவிடும் என்பதால்த்தான் வள்ளுவர் அப்படிச் சொல்லியிருக்கிறார். இவ் உண்மையைச் சுமந்திரனும், சாணக்கியனும் உணரவேண்டும்.

முன்பு எடுக்கப்பட்ட ஒரு முடிவுக்கு, பின்பு நடக்கும் ஒரு சம்பவத்தைச் சான்றாய்ச் சொல்வது அறிவீனம். எடுக்கப்பட்ட முடிவு சரியானது என்பதற்கான சான்றினை, அம் முடிவு எடுக்கப்படுவதற்கு முன் நிகழ்ந்த நிகழ்வுகளைக் காட்டியே உறுதிப்படுத்த வேண்டும். அங்ஙனமன்றி, முன் எடுத்த முடிவுக்குப் பின் நடக்கும் சம்பவத்தைச் சான்றாய் உரைப்பதைத் தர்க்க அறிவுள்ளவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

ரணில், கொடியவர் என்று தெரிந்துதான் அவருக்கு எதிராக முடிவெடுத்தோம் என்று இவர்கள் சொல்வது உண்மையானால், நல்லாட்சிக் காலத்தில் அவரை வழிமொழிந்து நின்ற போது இவர்களுக்கு இந்த உண்மை தெரியாதது ஏன் என்ற கேள்வி வரும்.

ஆகவே, வெறும் புத்திசாலித்தனங்களை விட்டுவிட்டுக் காலமாற்றத்திற்கு ஏற்ப இயங்க முற்படுவதுதான் அறிவு. இந்த விடயத்தில் இவர்கள் மனோகணேசனை முன்னுதாரணமாய்க் கொள்ளவேண்டும். ரணிலுக்கு எதிராக வாக்களித்தபோதும் அவர் வென்ற பின்பு, அவரோடு பகை பாராட்டாமல் இணைந்து இயங்க நினைக்கும் மனோகணேசனின் புத்திசாலித்தனம் பாராட்டிற்குரியது.

ஒரு தலைவன் என்பவன் ஒரு தனி மனிதன் அல்லன். அவன் ஓர் இனத்தின் குறியீடு. அதனால், தான் வெல்வதைவிட இனத்தை வெல்லச் செய்வதை அவன் முதன்மைப் படுத்தவேண்டும். அதற்காகத் தனிமனிதனாய் ஓரிரண்டு படிகள் இறங்கவும் துணியலாம். சுமந்திரன் ஆகியோர் ரணிலோடு தனிப்பகை பாராட்டுவதை உடன் நிறுத்தவேண்டும். இவர்கள் புரட்சியாளர்கள் அல்லர். ஓர் இனத்தின் பிரதிநிதிகள். அந்த இனத்தைக் காப்பதுதான் அவர்களது முதற் கடமை. ரணிலுடன் காட்டும் தனிப்பகையும், அவரை நோக்கி விடும் வீண் சவால்களும், இவர்களுக்கு அன்றி இனத்திற்கே பெரும் பகையைத் தேடிக் கொடுக்கப் போகிறது. இதை உணர்ந்து இவர்கள் ரணிலோடு சமரசம் செய்து கொள்வதே நல்லதென்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ நேர்மையான உண்மையான பதில்! வாரிதியாரை உலகநாதர் பாராட்டுகிறார்.**

**4. கேள்வி:-** சுமந்திரனைத் தலையில் வைத்துக் கொண்டாடினீர்கள். இப்போது அவரே சறுக்கி விட்டார் என்று எழுதுகிறீர்கள். இதுவரையிலான உங்கள் கணிப்புப் பிழைத்துவிட்டதை உணர்கிறீர்களா?

**பதில் :-** ஒருக்காலும் இல்லை! சறுக்கல் என்ற வார்த்தைக்கே எதிர்பாராமல் வழுக்கி விடுவது என்பதுதான் அர்த்தம். சுமந்திரன் செய்த ஏதோ ஒரு கணிப்புத் தவறியிருக்கிறது. அவ்வளவுந்தான்! அதை வைத்துக் கொண்டு சுமந்திரனை ஒன்றுக்கும் உதவாதவர் போலப் பேசுவது பெருங்குற்றம். இன்றைக்கும் அடித்துச் சொல்லுகிறேன். நம் இனத்தை வழிநடத்தும் அறிவாற்றலும், நமது பிரச்சினையை உலக அரங்கில் கையாளும் தகுதியும், யதார்த்தம் அறிந்து செயற்படும் நுண்ணறிவும், மற்றவர்களால் மதிக்கப்படும் கண்ணியமும் அவரிடம் இருக்குமளவுக்கு வேறு தலைவர்களிடம் இருக்கிறதா என்பது ஐயமேயாம். இது போன்ற விடயங்களில் அவரே அவருக்கு நிகராகிறார் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. இன்றும்கூட, இருக்கும் தமிழ்த் தலைவர்களை வரிசைப்படுத்துக என்று நீங்கள் சொன்னால், சுமந்திரனின் பெயரைத்தான் நான் முதலில் எழுதுவேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'சிரிப்புத்தான் வருகுதையா!'**

**5. கேள்வி:-** நாடாளுமன்றில் நடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின் மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் விடுத்த அறிக்கைகளைப் பார்த்தீர்களா?

**பதில்:-** 'அண்ணை எப்ப சாவான் திண்ணை எப்ப காலியாகும்' என்ற பழமொழிதான் ஞாபகத்திற்கு வந்தது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ திரண்டால் மிடுக்கு. ஹி..ஹி..ஹி..**

**6. கேள்வி:-** யாழ்ப்பாணத்தில் திடீரென மதகுருமார் சிலர் ஒன்றிணைந்து, தமிழ்த்தலைவர்களை ஒன்றுபட்டு இயங்கக் கோரியது பற்றி?

**பதில்:-** காலம் அறியாமல் செய்த முயற்சி அது. நாட்டின் வீழ்ச்சி நோக்கி ஒட்டுமொத்த மக்களும் போராடிக் கொண்டிருந்த சத்தத்தில், இனநன்மை நோக்கி இவர்கள் எழுப்பிய ஒற்றுமைக் குரல் அடங்கிப் போய் விட்டது. நடந்த அக் கூட்டத்தில் மூன்று இந்துமதத் தலைவர்களும், ஒரு கிறிஸ்தவ மதத்தலைவருமே இருந்திருக்கிறார்கள். இஸ்லாமிய மதத்தலைவர்கள் ஒருவரையும் காணமுடியவில்லை. இந்தச் சமநிலை அற்ற தன்மை, அவசர ஒன்றுகூடலின் அடையாளம். அதைத் தவிர நம் தலைவர்களை எதற்காக ஒன்று கூடச்சொல்கிறார்கள் என்பது பற்றியும் இதுவரை இவர்களிடமிருந்து சரியான கோரிக்கை ஏதும் வந்ததாய்த் தெரியவில்லை. அப்படித்தான் இவர்கள் என்ன நல்ல கோரிக்கையை முன்வைத்தாலும் நம் தலைவர்கள் ஒன்றுபடவா போகிறார்கள்?நடந்தது வீண் முயற்சி என்றே கருதுகிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ ஆண்டிகள் தலையால் கட்டிய மடமோ?**

**7. கேள்வி:-** தமிழ் மக்களுக்கு நன்மை பெற்றுத்தரவே தான் ரணிலுக்கு ஆதரவளித்தார் என முன்னாள் முதலமைச்சர் சொல்வது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** என் வாயைக் கிளறுவதில் உங்களுக்கென்ன சந்தோஷம்? பாவம் அவரை விட்டுவிடுவதுதான் நல்லது போல் தெரிகிறது. நிபந்தனைகள் விதித்துத்தான் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்றவர் ரணில் ஏற்றுக் கொள்ளும்படியாக என்ன நிபந்தனை விதித்து அவருக்கு வாக்களித்தார் என்று தெரியவில்லை. இன்றைய நிலையில் நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய அனுபவம் ரணிலுக்குத்தான் இருக்கிறது என்கிறார். இவர்தான் முன்பு ரணிலை வரவேற்கவும் செல்லமாட்டேன் என்று யாழில் பிடிவாதம் பிடித்தார். ஒரு காலத்தில் இவரை நிமிர்த்த என முயற்சித்த, தமிழ் மக்கள் பேரவை, பின்னர் இவரோடு இணைந்து தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள் என்பவையெல்லாம் இன்று இவர் மீதான நம்பிக்கையை இழந்து நிற்கின்றன. இவராவது, தமிழ் மக்களுக்கு நன்மை பெற்றுத் தருவதாவது?..... ஒருநாளும் 'தனிமரம் தோப்பாகாது.'

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'அன்பே நீ அங்கே! நாம் இங்கே! இன்பம் காண்பது எங்கே?'. ஹி.. ஹி.. ஹி..**

# இலங்கை சிறுவர்களின் மனோநிலையை பொருளாதார நெருக்கடி பாதிக்கின்றது

## சேவ் த சில்ரன் அமைப்பு வேதனை

இலங்கையின் மூன்றிலொரு குடும்பம் கடந்த ஆறு மாதத்தில் தங்களது பிள்ளையின் நடத்தையில் எதிர்மறையான மாற்றத்தை அவதானித்துள்ளது என சேவ் த சில்ரன் தெரிவித்துள்ளது.

இலங்கை பொருளாதார வீழ்ச்சியை நோக்கி சென்றுக்கொண்டுள்ள சூழலில் இந்த நிலை காணப்படுவதாக சேவ் த சில்ரன் தெரிவித்துள்ளது. சேவ் த சில்ரன் மேற்கொண்ட ஆய்வின் மூலம் இது தெரியவந்துள்ளது.

இலங்கையின் ஒன்பது மாவட்டங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 300 குடும்பங்களை அடிப்படையாக வைத்து சேவ் த சில்ரன் ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளது.

ஆய்வில் கலந்துகொண்ட நான்கில் மூன்று குடும்பங்கள் தங்களின் பிள்ளைகளின் உணர்ச்சி மற்றும் மனோநலத்தேவைகளுக்கு இடமளிப்பதற்காக அவர்களுடன் அதிகநேரத்தை செலவிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

அதிகரிக்கும் பணவீக்கம், நாளாந்த மின்வெட்டுகள், உணவு, மருந்து, எரிபொருள் போன்றவற்றுக்கான தட்டுப்பாடுகள் குடும்பங்களை சமாளிக்கும் திறனுக்கு அப்பால் கொண்டு சென்றுள்ளன எனத் தெரிவித்துள்ள சேவ் த சில்ரன் குடும்பங்களின் பொருளாதார அழுத்தம் காரணமாக பத்தில் ஒரு குழந்தை பசிஉணர்வை இழந்துள்ளது வன்முறை குணம் அதிகரித்துள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.

ஐந்தில் ஒரு குழந்தையின் உறக்கநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. சிறுவர்கள் தங்கள் உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதில் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர், ஏனையவர்களுடன் வன்முறையான விதத்தில் நடந்து கொண்டுள்ளனர், அல்லது படுக்கையை நனைத்துள்ளனர் எனவும் சேவ் த சில்ரன் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரியை சேர்ந்த லக்ஸ்மி என்ற பத்து வயது சிறுமி பொருளாதார நெருக்கடி காரணமாக பஸ்கள் ஓடாததால் தன்னால் பாடசாலைக்கு செல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும் தனது நகரில் எரிபொருள் வரிசையை பார்த்தேன் எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிலைமை எனக்கு கவலையளிக்கின்றது. நாடு என்ற ஒன்று இருக்காது என நான் அச்சமடைகின்றேன். எரிபொருள் பிரச்சினை உள்ளது. உணவுப்பொருள்களின் விலைகள் அதிகரித்துள்ளன என லக்ஸ்மி தெரிவித்துள்ளார்.

நாட்டுக்காக ஏதாவது செய்வதற்கான சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தால் நான் மக்களின் முன்னேற்றத்துக்காக எதனையாவது செய்வேன் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பதுளையை சேர்ந்த 37 வயது தாயான நதீசா பெற்றோர் என்ற அடிப்படையில் நிதி நெருக்கடி தன் மீது செலுத்தும் தாக்கம் தனது பிள்ளைகளின் மனோநிலை மீது ஏற்படுத்தும் பாதிப்பு தொடர்பில் தெரிவித்தார்.

எனது சிறுவர்களின் நடத்தையில் நான் பெரும் மாற்றங்களை அவதானித்துள்ளேன், அவர்கள் நிலைமை தொடர்பாகக் கவலையடைந்துள்ளனர், ஆனால் அவர்கள் அதனை காண்பிக்கின்றார்கள் இல்லை, முன்னர் போன்று என்னால் தற்போது அவர்கள் விரும்புவதை கொடுக்க முடியாததால் அவர்கள் கவலையடைந்துள்ளனர், தங்கள் பெற்றோருக்கு நிரந்தரவருமானம் இல்லை என்பது தொடர்பாக அவர்கள் கவலையடைந்துள்ளனர், முன்னர் போன்று அவர்கள் மகிழ்ச்சியாக இல்லை, அவர்கள் முன்னர் போன்று வெளியில் விளையாடச் செல்வதில்லை. நாளை என்ன நடக்கப்போகின்றது என்பது தொடர்பாக அவர்கள் கவலையடைந்துள்ளனர் என அவர் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி மன நலப் பாதிப்பில் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ள போதிலும் போதிய வளங்கள் இல்லாததால் இந்த வகையான உதவிகள் தேவைப்படுபவர்களுக்கு மனநல மற்றும் உளவியல் உதவிகளை வழங்க முடியாத நிலையில் நாடு காணப்படுகின்றது என ஐ.நாவின் இலங்கைக்கான மனிதாபிமான தேவைகள் மற்றும் முன்னுரிமை திட்டம் தெரிவிக்கின்றது.

உரிய ஆதரவில்லாவிட்டால் ,பொருளாதார நெருக்கடி சிறுவர்களின் மனநலம் மீது ஏற்படுத்தும் தாக்கம் அதிகரிக்கலாம். நீண்டகால நல்வாழ்விற்கான வாய்ப்புகள் பாதிக்கப்படலாம்.

கடினமான நெருக்கடியான அமைதியற்ற சூழ்நிலைகளில் குழந்தைகள் அதிக அழுகை அலறல் அதிகளவு ஆக்ரோஷமான நடத்தை,அல்லது வன்முறை மற்றும் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதில் சிரமம் மூலம் தங்கள் அழுத்தத்துக்கான அறிகுறிகளை வெளிப்படுத்தலாம் என சேவ் த சில்ரனினின் இலங்கைக்கான இயக்குநர் ஜூலியன் செல்லப்பா தெரிவித்துள்ளார்.

சிலர் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த மாட்டார்கள். ஒடுங்குவார்கள். இதுவே இலங்கையில் இடம்பெறுவதை நாங்கள் காண்கின்றோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்கள் நெருக்கடியைப் புரிந்துகொள்வதற்கு சிரமப்படுவார்கள் நெருக்கடியை புரிந்துகொண்டு அதனை சமாளிப்பதற்கு குடும்பத்தவர்கள் நண்பர்களின் உதவி அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ள அவர் சிறுவர்களுக்கு ஆதரவு கிடைக்காவிட்டால் அறிகுறிகள் மேலும் மோசமடையலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

உணவு, சுத்தமான நீர், ஏன் கல்வியை கூடப் பெறுவது தொடர்பாகத் தொடர்ச்சியான கவலைகள் இலங்கை சிறுவர்களைக் கடுமையாகப் பாதிக்கின்றன. அரசாங்கம் இந்த நெருக்கடிக்கு பேண்தகு தீர்வை முன்வைக்கவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம். – என அவர் தெரிவித்துள்ளார்.

# அரசாங்கம் ஒதுக்கிய இடத்தில் போராட்டம் செய்யத் தயாரில்லை

## அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் காட்டம்

அரசாங்கம் ஒதுக்கி இருக்கும் விகாரமாதேவி பூங்காவில் போராட்டம் மேற்கொள்ள நாங்கள் தயாரில்லை. எங்களுக்குத் தேவையான இடத்திலே நாங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோம். யார் என்ன சொன்னாலும் நாட்டு மக்களுக்காக மேற்கொள்ளப்படும் போராட்டத்தைத் தொடர்ந்தும் காலிமுகத்திடலில் முன்னெடுத்துச்செல்வோம் என அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் வசந்த முதலிகே தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

போராட்டம் மேற்கொள்ள கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இடம் ஒதுக்கித்தருவதாக அரசாங்கத்தின் சில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். நாங்கள் அதற்குத் தயார் இல்லை. தற்போது நாங்கள் போராட்டம் மேற்கொள்ளும் இடம் பொது மக்களுக்கு எந்த இடையூறும் இல்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட அரசாங்கம் பதவி விலகும்வரை போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போம்.

அத்துடன் போராட்டம் ஒன்றை எந்த இடத்தில் முன்னெடுக்க வேண்டும் என யாருக்கும் தெரிவிக்க முடியாது. அதனால் எமது தீர்மானத்தில் நாங்கள் மாறப்போபவர்களல்லர். இந்த திருட்டு கும்பலை வீட்டுக்கு அனுப்பும்வரை நாங்கள் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுப்போம்.

நாட்டில் எரிபொருள் பிரச்சினை, எரிவாயு பிரச்சினை உட்பட நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்காமல் அரசாங்கம் மக்களை அடக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எனவே அரசாங்கம் எமது போராட்டத்தை அடக்குவதற்குப் பதிலாக மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசாங்கம் தெரிவிக்கும் இடத்தில் போராட்டம் செய்ய நாங்கள் தயாரில்லை. எமது மக்கள் போராட்டம் காலிமுகத்திடல் கோட்டா கோ கமவில் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். – என்றார்.

# உரத்தை திருடி அதிக விலைக்கு விற்பனை செய்த ஐவர் கைது!

மஹஓய விவசாய சேவை திணைக்களத்தின் விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த உரத்தை வேறு ஒரு தரப்பினருக்கு விற்பனை செய்தமை தொடர்பில் விவசாய சங்கத்தின் அதிகாரிகள் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மஹஓய பிரதேச விவசாய சேவைகள் திணைக்களத்தில் மஹஓய பிரதேச விவசாயிகளுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டிருந்த உரப்பொதிகளே இவ்வாறு திருடப்பட்டுள்ளன என விவசாய சேவை அலுவலக அதிகாரி ஒருவரால் மஹஓய பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் உரத்தை விவசாயிகளுக்கு வழங்காமல் வேறு தரப்பினருக்கு விற்பனை செய்தமை தொடர்பில் விவசாயிகள் சங்கத்தின் தலைவர்கள் மூவர், செயலாளர் மற்றும் அதற்கு உதவியாக செயற்பட்ட ஒருவர் உட்பட ஐவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 34 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அவர்கள் மஹஓய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேக நபர்கள் மூலம் 50 கிலோ அடங்கிய 111 உரப்பொதிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன் விற்பனை மூலம் பெறப்பட்ட 2 லட்சத்து 77 ஆயிரம் ரூபாவும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் தெஹியத்த கண்டி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்கள். சம்பவம் தொடர்பில் மஹஓய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பேராசிரியர்களான சுனந்த மத்துமபண்டார, ஷெனுகா செனவிரத்ன ஜனாதிபதியின் தேசிய, சர்வதேச ஊடக ஆலோசகர்களாக நியமனம்



பேராசிரியர் சுனந்த மத்துமபண்டார மற்றும் பேராசிரியர் ஷெனுகா செனவிரத்ன ஆகியோர் ஜனாதிபதியின் தேசிய மற்றும் சர்வதேச ஊடக ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் சுனந்த மத்துமபண்டார ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராகவும் (ஊடகம்) மற்றும் பேராசிரியர் ஷெனுகா செனவிரத்ன, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராகவும் (சர்வதேச ஊடகம்) அண்மையில் கடமைகளைப் பொறுப்பேற்றனர்.

களனிப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரான பேராசிரியர் சுனந்த மத்துமபண்டார , அந்த பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ்ஞான கல்விப் பிரிவின் தலைவராகவும் சமூக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியாகவும் பணியாற்றியுள்ளார்.

வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சின் செயலாளராகப் பணியாற்றியுள்ள அவர், அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகமாகவும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி மற்றும் தொடர்பாடல் பணிப்பாளர் நாயகமாகவும் பதவி வகித்துள்ளார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் (சர்வதேச ஊடகம்) பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ள ஷெனுகா செனவிரத்ன, இந்த நாட்டின் இராஜதந்திர விவகாரங்களில் அதிக அனுபவமுள்ள சிரேஷ்ட அதிகாரியான அவர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பதவியையும் வகித்துள்ளார்.

ஷெனுகா செனவிரத்ன, ஐக்கிய இராச்சியத்தின் இலங்கைஉயர்ஸ்தானிகராகவும், தாய்லாந்துக்கான இலங்கைத் தூதுவராகவும், ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பிரதிநிதியாக ஜெனிவா மற்றும் நியூயோர்க்கில் பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களின் சீரான கல்வி நடவடிக்கைகளுக்கு எரிபொருள் விசேடமாக வழங்குவதற்குத் தயார்!

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் முன்மாதிரி செயற்பாடு

தற்பொழுது நாட்டில் நிலவி வருகின்ற எரிபொருள் நெருக்கடி காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டிருப்பது எங்களுடைய எதிர்கால சமுதாயத்தின் கல்விமான்களை உருவாக்குவதில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தக்கூடுமென சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் கேசவதாசன் தெரிவித்தார்.

சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

யுத்த காலத்தில் நான் தொண்டராசிரியராக வன்னி பெருநிலப்பரப்பின் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த பொழுது பதுங்குகுழியிலும் பாடம் பயில்வோம் என்ற அடிப்படையில் விமான குண்டு வீச்சுக்கள் இடம்பெற்ற நிலையில் கூட எங்களுடைய மாணவ செல்வங்கள் பாடசாலைகளில் பொது இளைஞர்களால் அமைக்கப்பட்ட பதுங்குகுழியினுள் இருந்துவிட்டு மீள பாடங்களைக் கற்றார்கள் .

அவ்வாறான ஓர் இக்கட்டான சூழ்நிலையில் யுத்த காலத்தில் கூட ஐந்து நாள்களும் பாடசாலைகள் இடம்பெற்றது. சிறந்த பெறுபேறுகளையும் மாணவர்கள் பெற்றிருந்தார்கள். ஆனால் தற்காலத்தில் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் மாணவச் செல்வங்கள் மோட்டார் வாகனங்களில் பாடசாலைக்குச் சென்று கல்வியைத் தொடர்ந்தாலும் அதற்கு பழக்கப்பட்டாலும் அருகில் இருக்கக்கூடிய, குறிப்பிட்ட மைல்களுக்குட்பட்ட ஆசிரியர்கள் தாமாகவே சேவைக்கு செல்லமுற்படலாம். மேலும் பொதுப்போக்குவரத்தை பயன்படுத்தலாம். பாடசாலைக்கு வருகின்ற பொழுதும் தூரப்பிரதேசங்களில் இருக்கக்கூடிய ஆசிரியர்களை அதிபர்கள் கோட்டக்கல்வி படைப்பாளர்கள் வலய கல்வி பணிப்பாளர்கள் இணைந்து ஓர் உறுதிப்படுத்தலை மேற்கொள்கின்ற தருணத்திலும் அவர்களுக்குரிய எரிபொருளை வழங்கி ஐந்து நாள்களும் பாடசாலைகளை நடத்த முடியும் என்பது என்னுடைய கருத்தாக காணப்படுவதோடு மேலும் தென்மாகாணத்தில் அங் கிருக்கக் கூடிய மாணவர்களுடைய கல்வி நிலையை கருத்தில் கொண்டு பாடசாலைகள் ஐந்து நாள்களும் இயக்கப்படுகின்றது.




ஆகவே, எங்களுடைய தமிழ் மாணவர்களுடைய எதிர்கால நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒரு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் என்ற வகையில் எங்களுடைய பிரதேசத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்களுடைய விவரங்களை ஒரு முறைப்படுத்தி அவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற எரிபொருளுக்கு மேலாக எரிபொருளை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நம்மோடு தொடர்பு கொண்டு ஒரு முறைமையை உருவாக்குவதன் மூலம் சங்கானை பல நோக்க கூட்டுறவுசங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையம் கல்வி நடவடிக்கைகளை தொடர்வதற்கு எப்பொழுதும் உதவி புரியும் என்பதை இத்தருணம் தெரிவித்து நிற்கின்றது. – என்றார்.

# பத்திரிகையாளர் மீதான தொடர் தாக்குதல்களை உடனடியாக முடிவிற்குக் கொண்டுவரல் வேண்டும்

## பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு கோரிக்கை

இலங்கையின் பாதுகாப்பு படையினர் பத்திரிகையாளர்கள் மீது மேற்கொண்ட தாக்குதல் தொடர்பாக அதிகாரிகள் முழுமையான துரித விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள பத்திரிகையாளர்களை பாதுகாப்பதற்கான குழு எக்ஸ் போஸ் நியுசின், பணியாளர்களை துன்புறுத்துவதை அதிகாரிகள் நிறுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜுலை 22 ஆம் திகதி அதிகாலை தனியார் டிஜிற்றல் செய்தித்தளமான எக்ஸ்போஸ் நியுசின் மூன்று பத்திரிகையாளர்கள் உட்பட நான்கு பத்திரிகையாளர்கள் மீது பாதுகாப்புத் தரப்பினர் தாக்குதலை மேற்கொண்டனர், ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் பகுதி மீதான பாதுகாப்புத் தரப்பினரின் நடவடிக்கை தொடர்பாகவும் பின்னர் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் பற்றியும் செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்களே தாக்கப்பட்டனர் என சி.பி.ஜேயு டன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட இந்த பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டங்கள் தொடர்பாகச் செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட மூன்று பத்திரிகையாளர்களைத் தேடி 27 ஆம் திகதி எக்ஸ்போசர் நியுசின் அலுவலகத்துக்கு பொலிஸார் சென்றுள்ளனர் என அந்த பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர்.

தொடரும் பொருளாதார அரசியல் நெருக்கடி காரணமாக இலங்கையில் ஆர்ப்பாட்டங்கள் மூண்டுள்ளன, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 13 ஆம் திகதி நாட்டிலிருந்து தப்பிவெளியேறிய பின்னர் மறுநாள் தனது பதவியை இராஜினாமா செய்தார். 21 ஆம் திகதி முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

இலங்கையில் அரசியல் அமைதியின்மை தொடர்பாகச் செய்தி அறிக்கையிடலில் ஈடுபட்டுள்ள பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல் உடனடியாக முடிவிற்குவரவேண்டும் என பத்திரிகையாளர்களைப் பாதுகாப்பதற்கான குழுவின் திட்ட இயக்குநர் கார்லோஸ் மார்ட்டினெஸ் மட்ரிட்டில் தெரிவித்தார்.

அதிகாரிகள் இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக முழுமையாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்,குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்த வேண்டும்,எக்ஸ்போசர் நியுசின் பணியாளர்களை துன்புறுத்துவதை நிறுத்தவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜுலை 22 ஆம் திகதி பி.பி.சி.யின் கமரா இயக்குநர் மற்றும் வீடியோ எடிட்டர் ஜூீன் சாமுவேலைப் பாதுகாப்பு தரப்பினர் தாக்கினார்கள் – கொழும்பு காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்ட முகாமின் மீது படையினரின் தாக்குதல் தொடர்பாகச் செய்தி சேகரித்துக் கொண்டிருந்தவேளையே அவர் மீது தாக்குதல் இடம்பெற்றது என பி.பி.சியின் செய்தியாளரான எங்களுடன் தொலைபேசி மூலம் உரையாடிய சாமுவேலும் தெரிவித்தனர்.

நானும் எனது குழுவினரும் நாங்கள் ஊடகவியலாளர்கள் என்பதற்கான ஆவணங்களைக் காண்பித்தோம். ஆனால் அதிகாரிகள் மீண்டும் மீண்டும் என்னைத் தாக்கினார்கள். நிலத்தில் தள்ளிவிழுத்தி வயிற்றில் காலால் உதைத்தார்கள் எனத் தெரிவித்த சாமுவேல், எனது கையடக்க தொலைபேசியை பறித்து அதிலிருந்த வீடியோக்களை அழித்த பின்னர் திருப்பி கொடுத்தனர் எனவும் தெரிவித்தார்.

இதன் காரணமாக தான் உள்ளூர் வைத்தியசாலையில் காயங்களிற்கு கிசிச்சை பெற்றதாக அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதி மாளிகையில் மின் அழுத்தியை திருடியவர் கைது அலரி மாளிகையில் தொலைக்காட்சி திருடியவருக்கு மறியல்!

கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகைக்குள் அத்து மீறி பிரவேசித்து, அங்கிருந்த மின்னழுத்தி ஒன்றைத் திருடினார் எனக் கூறப்படும் நபர் ஒருவரை கொழும்பு மத்திய வலய குற்ற விசாரணைப் பணியக அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

உப பொலிஸ் பரிசோதகர் அசேல தலைமையிலான குழுவினர் சந்தேக நபரை புதன்கிழமை இரவு 7.10 மணியளவில் கைது செய்துள்ளனர். கொழும்பு 13 ஆட்டுப்பட்டித் தெருவை சேர்ந்த ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள நிலையில், சந்தேக நபரிடம் இருந்து இளம் நீலம் மற்றும் வெள்ளை நிறம் கலந்த மின்னழுத்தி மீட்கப்பட்டுள்ளதாக கொழும்பு மத்திய வலய குற்ற விசாரணை பணியகம் தெரிவித்தது. சந்தேக நபர் வியாழக்கிழமை கோட்டை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளார்.

இதனிடையே, கடந்த ஜுலை 9 ஆம் திகதி போராட்டக்காரர்கள் கொள்ளுபிட்டி அலரிமாளிகையை சுற்றி வளைத்த போது, அந்த மாளிகைக்குள் அத்து மீறி அங்கிருந்த இரு தொலைக்காட்சிகளை திருடியதாகக் கூறப்படும் நபர் ஒருவரை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் கைது செய்து வியாழக்கிழமை கோட்டை நீதிவான் திலின கமகே முன் ஆஜர் செய்தனர். இதன்போது சந்தேக நபரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

# பின்தங்கிய பழங்குடிப் ......

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இப்போது முன்னெடுத்துச் செல்லும் ஜனாதிபதியின் மரபு பற்றி அறிந்த முர்மு, இந்தியாவின் ஜனநாயக – கலாச்சார இலட்சியங்கள் மற்றும் அனைத்து குடிமக்களும் எப்போதும் தனது ஆற்றலின் ஆதாரமாக இருப்பார்கள் என்றார். மகாத்மா காந்தி, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், ஜவஹர்லால் நேரு, சர்தார் படேல், பி.ஆர்.அம்பேத்கர், பகத்சிங், சுகதேவ், ராஜ்குரு மற்றும் சந்திரசேகர் ஆசாத் ஆகியோரின் பங்களிப்புகளை அங்கீகரித்து, ஒரு தேசமாக இந்தியாவின் புதிய பயணத்திற்கான சாலை வரைபடத்தைத் தயாரித்த இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தை அவர் நினைவு கூர்ந்தார். ஒருபுறம், ராணி லக்ஷமி பாய், ராணி வேலு நாச்சியார், ராணி கெய்டின்லியு மற்றும் ராணி சென்னம்மா போன்ற பெண் சின்னங்கள் மறுபுறம், ஜனாதிபதி முர்மு தேசத்தை பாதுகாப்பதிலும் கட்டியெழுப்புவதில் பெண் சக்தியின் பங்கை புதிய உயரத்திற்கு கொண்டு சென்றுள்ளார் என்று கூறினார்.

சமூக மேம்பாடு மற்றும் தேசபக்திக்காக ‘தர்த்தி ஆபா’ பகவான் பிர்சா முண்டாவின் தியாகத்தையும் அவர் குறிப்பிட்டார். மேலும் சந்தால், பைகா, கோல் மற்றும் பில் புரட்சிகள் மூலம் சுதந்திரப் போராட்டத்திற்கு பழங்குடி சமூகங்கள் செய்த பங்களிப்பையும் அவர் குறிப்பிட்டார்.

திங்கட்கிழமை காலை பதவி விலகும் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துடன் மத்திய மண்டபத்துக்குச் சென்ற முர்மு, மக்களின் நலன்களை நிறைவேற்ற சப்கா பிரயாஸ் (அனைவரின் முயற்சி) மற்றும் சப்கா கர்தவ்யா (ஒவ்வொருவரின் கடமையும்) என்ற இரட்டைப் பாதையில் நாடு விரைவாகச் செல்ல வேண்டும் என்ற எதிர்பார்ப்பை வெளிப்படுத்தினார்.

பிரம்மகுமாரி பாரம்பரிய தியானத்தின் பயிற்சியாளரான முர்மு, வளர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்தும் இந்தியாவின் பண்டைய பாரம்பரியங்களில் பெருமை கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இயற்கையோடு இயைந்த பழங்குடிப் பாரம்பரியத்தில் பிறந்தவன் நான். என் வாழ்வில் காடுகள் மற்றும் நீர்நிலைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து விட்டேன். இயற்கையிலிருந்து தேவையான வளங்களை எடுத்துக் கொண்டு இயற்கைக்குச் சமமான மரியாதையுடன் சேவை செய்கிறோம். இந்த உணர்திறன் இன்று உலகளாவிய இன்றியமையாததாக மாறியுள்ளது, என்று அவர் கூறினார்.

முர்மு பதவியேற்றமையைத் தொடர்ந்து, ஜனாதிபதியின் காவலர்களால் ராஷ்டிரபதி பவனுக்கு அழைத்துச் செல்லப்பட்டார், அங்கு அவர் வைபவ ரீதியாக முப்படைகளின் மரியாதையை ஏற்றுக் கொண்டார். ஆயுதப் படைகளின் புதிய தலைமைத் தளபதி கோவிந்த் மற்றும் அவரது குடும்பத்தினரை முறைப்படி அனுப்பி வைத்தார். அவர் இப்போது தனது புதிய முகவரியான 12 ஜன்பத்திற்கு மாறுகிறார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-77

போபகேயும் நல்ல குரல் வளம் கொண்ட அவரது மனைவியும், 'விடு தலை கீதம்' என்ற இசை நிகழ்ச்சியை நாடெங்கும் நடத்தினர். அத்தருணங்களில் எல்லாம் உண்டியல் குலுக்குவதும், அங்கத்தினர்களையும் ஆதரவாளர்களையும் தேடுவதும், போபகேயின் முக்கிய முனைப்பாக இருந்தன. அவற்றில் கிடைத்ததே புஷ்பராஜா போன்ற மாணவர் பேரவை நண்பர்களின் அறிமுகங்களும், 1978 காலப்பகுதியில் இளைஞர் பேரவையின் சந்ததியாரும் அவரது நண்பர்களும். அந்தச் சந்திப்பு புளொட் அமைப்பினரோடு சிறிதளவு நெருங்கி, புளொட், ஜே.வி.பி. அங்கத்தினர்கே இணைந்து நிக்கவரெட்டியவில் முதலாவது வங்கிக் கொள்ளையை நடத்துவது வரை விரிந்தது. அதேசமயம் வேறு சில அறிமுகங்கள் ஊடாக ஈரோஸ் அமைப்பின் இரத்தினசபாபதி, ராஜி சங்கர் போன்ற உறுப்பினர்களுடன் தொடர்பாக இருந்தார்கள்.

நீர்கொழும்பில் வாழ்ந்த முருக பூபதியும் அவரது சில நண்பர்களும் கூட ஜே.வி.பிக்கு ஆதரவாக செயல்பட்டனர். முருகபூபதி 'செங்கதிர்' பத்திரிகை ஆசிரியர் குழாமில் உதவி புரிந்து, போபகே, வீஜேவீர, சோமவன்ஸ அமரசிங்க போன்ற பல தலைவர்களுக்கு தமிழ்ப் பத்திரிகைகளில் வரும் ஆக்கங்களை மொழிபெயர்த்தும், சில சமயங்களில் அவர்களது பேச்சுக்களை தமிழில் மொழிபெயர்த்து மக்களுக்கு வழங்கியும் வந்தார்கள்.

ஓரளவு சரளமான சிங்களம் பேசக் கூடிய கொழும்பு, மலையகப் பகுதிகளில் வசித்த தமிழ் மக்கள் ஜே.வி.பியை ஆதரவுடனும் அனுதாபத்துடனும் பார்த்தாலும், தமிழ் பிரதேசங்களில் ஊறியிருந்த தமிழ் தேசியத்தினாலும், தமிழ்ப் போராளிகள் குழுக்கள் தனி நாட்டை வலிமைப்படுத்தி இயங்கியமையாலும் ஜே.வி. பியை பெருமளவில் சிங்களக் கட்சியாகவே அவர்கள் பார்த்தார்கள். விடுதலை புலிகளுக்கு இயக்கத்திற்கு ஆதரவாக இருந்த இடதுசாரி கொள்கைவாதிகளான புதுவை இரத்தினதுரை போன்றோரும் வேறு சிலரும் 'செங்கதிர்' பதிப்புக்கு ஆதரவு தந்து அவற்றில் எழுத்தாக்கம் செய்தார்கள் என முருக பூபதி குறிப்பிட்டார்.

இனப் பிரச்சினைக்கான அணுகுமுறையை ஒட்டி பேதங்கள் வளர்ந்து கொண்டு இருந்தமையால் தமிழ்ப் பகுதிகளில் மக்களிடையே ஆழமாக ஊடுருவி கட்சியை வளர்ப்பதில் போபகேயும் அவரது நண்பர்களும் பலத்த ஆதரவை பெறவில்லை. ஆதலால் அமைப்பு ரீதியாகவும் தமிழ் பகுதிகளில் கட்டமைப்புகளையோ அவர்களது கட்டமைப்புகளில் தமிழ் இளைஞர்களையோ முக்கியப்படுத்த முடியவில்லை. கிளிநொச்சி, முல்லைதீவு, திருகோணமலை, மலையகம் போன்ற பகுதிகளில் இருந்து சில அங்கத்தினரையும் ஆதரவாளர்களையும் பெற்றாலும், மாத்தளையைப் பிறப்பிடமாகக் கொண்ட 36 வயதான ஆங்கில பாட ஆசிரியரான தங்கராஜா மற்றும் கேகாலை பகுதியைக் சேர்ந்த 30 வயதான பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து பொறியியல் பட்டதாரியாக வெளியேறிய ரஞ்சிதம் குணரட்ணம் என்ற இருவருமே தமிழர்களாக ஜே.வி. பியில் 1977 இன் பின் அமைக்கப்பட்ட மத்திய குழு அங்கத்தினராக இருந்தனர். ரஞ்சிதம் குணரட்ணம் தமிழ் விடுதலை குழுக்களுடன் உறவுகளைப் பேணி வந்தமையாலும், அவரது மும்மொழித் திறமையினால் நல்ல பேச்சாளரானமையினாலும் பெறுமதியுடன் பார்க்கப்பட்டார். இவற்றின் காரணங்களால் அவரின் தம்பி பிரேம்குமார் குணரட்ணம் மத்திய குழு உறுப்பினராக இல்லாவிட்டாலும், திருகோணமலை மாவட்டத்தின் காரியதரிசியாக அவரது தமிழ் விடுதலைக் குழுக்களின் உறவுகளைப் பேணுவதற்காக நியமிக்கப்பட்டார். தமிழ்ஒ பிரதேசங்களில் திருகோணமலையில் மாத்திரம் ஜே.வி.பி. கட்டமைப்பை வைத்திருந்தது. அதேசமயம் அவர்களுக்கு ஆதரவு தரக்கூடியவர்களாக தெரிந்த டாக்டர் என்.பி.சத்தியமூர்த்தி போன்றவர்களை அணுகி அவர்களுக்குத் தமிழ் பகுதிகளில் நடத்தப்பட்ட பிரச்சார கூட்டங்களில் நேரங்கள் ஒதுக்கினார்கள். இந்த வளர்ச்சி துரதிஷ்டவசமாக அவர்கள் தொடர வேண்டிய பாதைகளில் பேதங்களை ஏற்படுத்தியது.

### விஜேவீரவின் பிரசார பாதை

போபகே, தங்கள் கட்சி ஆழமாக வேர் விட்டு மக்களிடையே விரிந்து பரந்து, ஒரு புரட்சிக்காக அவர்களைத் தயார் படுத்த வேண்டுமென எழுச்சிக் கீதங்களும் பாடி, உண்டியல்களும் குலுக்கினார்.

ஆனால் விஜேவீரவோ பிரச்சாரக் கூட்டங்களால் கட்சியின் கொள்கைகள் மக்களைச் சென்றடைய வேண்டும், அதனால் கட்சி பலமடைந்து விரைவில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பின் தள்ளி, தாங்கள் ஐ.தே.கட்சிக்கு இரண்டாவது இடத்தில் இருக்க வேண்டும் என விரும்பினார். பிரசாரங்களை முன்னெடுத்து, நடத்த முடியாதவற்றை முடியும் எனப் பேசி, மக்களிடையே நம்பிக்கைகளை இழக்காமல், கட்சி இயங்கிக் கொண்டிருக்கும் வகையில் மக்கள் புரட்சிக்கான கட்டமைப்பையும், பிரச்சாரங்களையும் சமனாக செயல்படுத்த வேண்டுமென போபகே தர்க்கித்தார். எனினும் விஜேவீரவும் அவரது குழுவினரும் மக்களிடையே எழுந்த வரவேற்புகளால் பிரசாரக் கூட்டங்களும் இராணுவச் சீருடைகள், தொப்பிகள் அணிந்து, புரட்சி இராணுவமாக மக்களுக்கு மனதில் பதிவுகளை வைத்து, அதில் பெருமை கண்டார்கள்.

மாவட்ட சபைத் தேர்தல்களில் அவர்கள் பெற்ற வாக்கு வீதம் தெம்பைத் தர 1982 இல் ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிட விஜேவீர தீர்மானித்தார். புரட்சி பாதையில் இருந்து விலகி, அவர் நாடாளுமன்றப் பாதையில் இறங்குகிறார் என்று ஆதங்கம் போபகேக்கும் வேறு மத்திய குழு உறுப்பினர்களுக்கும் இருந்தாலும், நடந்த அரசியல் குழு வாக்கெடுப்பில் விஜேவீர அணி பெரும்பான்மை பெற்றமையால் யாவரும் கட்சிக்காக உழைத்தார்கள் என பின்னாளில் போபகே குறிப்பிட்டார்.


1982 இன் ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பி. பெற்ற கணிசமான வாக்குகளும் பிரசார மேடைகளில் எழுப்பப்பட்ட கேள்விகளும் அவர்களை இனப் பிரச்சினை பற்றித் தீவிரமாக விவாதிக்க வைத்தது.

போபகே, அரசாங்கத்தின் அடக்குமுறைகளையும், தரப்படுத்தலையும்,, வேலை வாய்ப்புகளில் புறக்கணிக்கப்படுதலையும் பாவித்தே முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி இனரீதியாகத் தமிழ் இளைஞர்களைத் தூண்டி விடுகிறது, அந்த இளைஞர்களையும் முதலாளி வர்க்கத்தினராகிய கூட்டணித் தலைவர்களிடம் இருந்து மீட்டு, தங்களோடு இணைத்து, நாளடாவிய ரீதியில் புரட்சியை மேற்கொள்ள வேண்டும், அதற்காக இவை எல்லாம் தவறானவை என ஒப்புக்கொண்டு, பிரிவினையை ஆதரிக்காது, தமிழ் மக்கள் தங்களை நிர்வகித்துக் கொள்ள ஏதுவான வழிகளைத் தர வேண்டும் என்ற யதார்த்தத்தை முன் வைத்தார்.

அந்த வாதம் விஜேவீர, சோமவன்ஸ அமரசிங்க, உபதிஸ்ஸ கமநாயக்க போன்ற முன்னணி அங்கத்தினர்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. விஜேவீர தமிழ் குழுக்களோடு உறவுகளை விரும்பவில்லை. அவர்கள் மார்க்சிய பாதைகளில் உருவாக்கப்படவில்லை, இனவாதத்திலேயே மூழ்கியுள்ளார்கள், மேலும் அவர்கள் வன்முறையில் ஈடுபடுகின்றமையால் அவை தங்களது வளர்ச்சியையும் பாதித்து அரசாங்கத்துக்கு வழிகளைத் தேடிக் கொடுக்கும் என்ற காரணங்களை முன்வைத்தார். தங்களோடு இணையும் தமிழ் இளைஞர்களை மார்க்சியப் பாதையில் இணைத்து பயணிப்பது அவரது திட்டம்.



Somawansa Amarasinghe, 1968



Somawansa Amarasinghe, 1983



Somawansa's wife Irangani Munasinghe



During the JVP's second uprising, the only Politburo Member of the party who escaped with his life, Somawansa Amarasinghe, at the Thivendra Hotel in India with his wife Irangani Munasinghe and a resident of Kurunegala Melsiripura who arranged the accommodation, Saudi Arabian JVP Riyadh Committee organiser Jayasinghe in February 1990, soon after reaching India. When Jayasinghe later arrived in Katunayake to get a passport prepared, he was arrested on information provided by Amare, a former Buddhist monk who had disrobed, and was assassinated

சோமவன்ஸ அமரசிங்கவின் நிலைப்பாடு மிகக் காரமானதாக இருந்தது. அதனால், 1977 ஜே.வி.பியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானங்கள் மீளப் பெறப்பட்டு, சுயாட்சி முற்றாகவே நிராகரிக்கப்பட வேண்டும் எனப் புதிய தீர்மானங்களை நிறைவேற்றினர்.

பெரும் படாடோபமாக நடத்தப்பட்ட பிரச்சாரக் கூட்டங்களில் மற்றைய அரசியல் தலைவர்களை கீழ்த்தரமாகத் தாக்கி விஜேவீரவும் தோழர்களும் பேசியமை மக்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அதனால் அவர்கள் திரண்டார்கள். ஆனால் போபகேயும் அவரது நண்பர்களுக்கும் இந்தக் கூட்டங்களுக்கு வருபவர்கள் அந்த நேரப் பேச்சுக்காகவே வருகிறார்கள் ஒழிய, மக்கள் புரட்சிக்கு வித்திடக்கூடிய திராணி கொண்டவர்களாக தோன்றவில்லை என்று கருதினர். ஆனால் விஜேவீரவோ தங்களது அங்கத்தினர்களது அணிவகுப்புகளும், சேரும் சனத்தொகைகளும் பெரும்பான்மை கட்சிகளுக்கு தரும் கிலியைப் பற்றி பேசி, மேலும் அப்படியான அணி வகுப்புக்களையும் மே தினக் கூட்டங்களையும் ஏற்பாடு செய்தார்கள். அதற்கு ஆதரவளித்துப் பங்கு பற்றிய ஜனக் கூட்டத்தால் அரசின் ஆதரவாளர்களுக்கு ஜே.வி.பி. வளர்ச்சி கவனிக்கப்பட வேண்டும் என்ற திட்டம் வளர்ந்தது. ஆனால் உண்மையில் நிலையை உணர்ந்த போபகே போன்றோர் கட்சியை நிதா னப்படுத்த முயன்றாலும், அதன் போக்கும் அரச ஆதரவு பத்திரிகைகள் அளவுக்கு மீறி விஜேவீரவைப் பற்றி எழுதியவற்றால் அவர் அதில் ஊறிசிலாகித்ததாலும், அதற்கு அவர்களால் இயலாமல் போயிற்று.

அந்த ஆதங்கங்களில் அவர்கள் உழன்றபோது, ஜே.ஆர்., சிறில் மத்தியூ போன்றோருடன் 1983 இனக் கலவரத்தைக் கட்டவிழ்த்து, அதன் அங்கமாக அவற்றுக்கு இடதுசாரிக் கட்சிகளின் மீது பழி போட்டு, ஜே.வி.பியைத் தடை செய்து, அதன் அங்கத்தவர்களை வேட்டையாடத் தொடங்கினார். விஜேவீரவும் அவருக்கு நெருக்கமாக இருந்த தோழர்களும் தலைமறைவானார்கள். இனி மக்கள் புரட்சிக்கான சாத்தியக் கூறுகள் கிடைப்பது அபூர்வம், பழையபடி 1971 இல் நடந்த மாதிரி கொரில்லா தாக்குதல்தான் தொடங்கும் என போபகே போன்றவர்கள் கணித்தார்கள்.

(வளரும்)